# திராவிட மாடலுக்குத்

# தெரியுமா?

டாஸ்மாக்



வேங்கைவயல்



# சனாதன வாசனை!

சனாதன விழிப்புணர்வு பிரசார வெளியீடு

**விசுவ ஹிந்து பரிஷத் - வட தமிழ்நாடு**

# இதுவல்லவா சனாதன ஹிந்து  தர்மம்!

❖ நெற்பயிர் மேல் பகுதி (நெல்) வீட்டுக்கு. நடுப்பகுதி (வைக்கோல்) மாட்டுக்கு. அடிப்பகுதி (வேர்) காட்டுக்கு - வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் சொன்ன மூதாதையர் கருத்து இது. மனிதனுக்கும் இயற்கைக்கும் எப்படிப்பட்ட உறவு இருப்பது நல்லது என்று கூறும் சனாதன ஹிந்து தர்மம்  இதுதான்.

❖ ஆராய்ச்சியாளர் தான் கண்டுபிடிக்கும் பொருளுக்கு தனக்கு இஷ்டமான பெயரை சூட்டுவது பழக்கம்; கல்வியாளர் நெ.து. சுந்தர வடிவேலுவின் மாணவர் ஒருவர் தான் கண்டுபிடித்த நுண்ணுயிர் ஒன்றிற்கு தனது ஆசான் சுந்தர வடிவேலுவின் பெயரை சூட்டினார். இந்த குருபக்தி தான் சனாதன  ஹிந்து தர்மம்.

❖ இருட்டில் வயல்வரப்பில் நடக்கும்போது சத்தம் அதிகமாக கேட்கும் வகையில் கிராமத்து செருப்பு தைப்பவர் செருப்பு தைத்து கொடுப்பார். காலடி சத்தம் கேட்டு பாம்பும் விலகும் தவளையும் விலகும். நடக்கும் விவசாயிக்கும் பாதுகாப்பு. இப்படி ஒரு தொழில்நுட்பம் பற்றி மத்திய தோல் ஆராய்ச்சி கழக இயக்குனர் திருவாளர் டாக்டர் நாயுடம்மா பல ஆண்டு களுக்கு முன் இளம் ஆராய்ச்சியாளர்களிடம் எடுத்துக் கூறியபோது செருப்பு தைப்பவரின் நல்ல மனதையும் சுட்டிக்காட்டினார். செய்யும் தொழில் வாயிலாக இப்படி சேவை செய்வது தான் சனாதன ஹிந்து தர்மம் கூறும் வாழ்க்கைமுறை.

❖ கோவலன் கொலையுண்டதால் தன்னைவிட்டு பிரிந்த துயரை கண்ணகி எடுத்துக் கூறவில்லை.  மாறாக, ‘‘அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும் துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை’’ (சிலப்பதிகாரம், கொலைக்களக் காதை 71-73) என்று அறம் செய்வோர்க்கு உதவுதல், அந்தண மரபினரைப் போற்றுதல், துறவிகளை எதிர்கொண்டு அவர்களுக்கு வேண்டுவன செய்தல், விருந்தினரைப் பாதுகாத்தல் என்ற நான்கு அறங்களை நான் தனித்திருந்ததால் செய்ய இயலவில்லை என்று கூறுகிறாள்.

❖ ‘‘கணவனை இழந்த பெண், மொட்டையடித்துக்கொண்டு வீட்டுக்குள் முடங்கிக் கிடக்க வேண்டும் என்று வேதம் சொல்லவில்லை. மாறாக, எழுந்திரு பெண்ணே, உன் கரம் பிடித்த கணவனின் மனைவி என்ற ஸ்தானத்தை இதுவரை அனுபவித்தாய், இனிமேலும் இந்த வாழ்வுலகில் உனது வாழ்க்கையை வாழ்’’ என்றுதான் ரிக் வேதம் (10.18.8) சொல்கிறது.

# திராவிட மாடலுக்குத்

## தெரியுமா?

# சனாதன வாசனை!

சனாதன விழிப்புணர்வு பிரசார வெளியீடு

**விசுவ ஹிந்து பரிஷத் - வட தமிழ்நாடு**

2/193, ஸ்ரீபெருமாள் நகர், நன்மங்கலம்,

சென்னை - 600 129.

☎ : 7904179287

# தமிழகத்தில்தான் சனாதனம் பிறந்தது!

– மேதகு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி

இன்று தமிழ்நாடு என்று அழைக்கப்படும் இந்த நிலம் ஒரு புனித பூமி. இங்கிருந்து ஆயிரக்கணக்கான ரிஷிகள், ஞானிகள் உருவாகி மனிதகுல நன்மைக்காக உழைத்திருக்கிறார்கள். இந்த நிலத்தில்தான் ச னாதன தர்மம் உருவாகியது. இந்த தர்மம் பாரதம் முழுவதும் பரவியது.

இந்த மண் திருமூலர், ராமானுஜர், ஆழ்வார்கள், நாயன்மார்கள் போன்ற பல ஞானிகளைத் தந்துள்ளது. அவர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சனாதன தர்மத்தைக் கடத்தி வந்திருக்கிறார்கள். சனாதன தர்மம் நீண்ட தொடர்ச்சியாக இன்றுவரை நம்மிடம் இருந்து வருகிறது. இப்படியான நீண்ட பாரம்பரியத் தொடர்ச்சி உலகில் வேறு எங்கும் கிடையாது.

சிலர் தனது அறியாமையால் சனாதன தர்மம் பிரிவினையை, தீண்டாமையை போதிக்கிறது என்று கூறுகிறார்கள், ஒருபோதும் அப்படி இல்லை. மனிதர்களிடையே பாகுபாட்டை உண்டாக்குவது சனாதனம் இல்லை. சனாதன தர்மத்தில் தீண்டாமைக்கு இடமே இல்லை.

இந்த மண்ணில் சனாதனம் நீடித்து நிலைத்திருக்கிறது. இங்கிருந்து அந்த ஒளி நாடு முழுவதும் பரப்பப்பட்டிருக்கிறது. இந்த மண்ணில் இல்லாமல் வெளியில் பிறந்தவர்கள் கூட இங்கு வந்து அந்த ஒளியைக் கண்டடைந்திருக்கிறார்கள். நரேந்திரன் இங்கு வந்ததால்தான் சுவாமி விவேகானந்தர் ஆனார்.

‘பாரதமும் சனாதன தர்மமும் பிரிக்க முடியாதவை. சனாதன தர்மம் வளரும்போது பாரதமும் வளரும்; சனாதன தர்மம் வீழும்போது பாரதமும் வீழ்ச்சியடையும்’ என்று அரவிந்தர் கூறியிருக்கிறார்.

சனாதன தர்மம் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்பதைப் பேசு கிறது. சனாதனத்தில் பிரிவுகள் இருக்கின்றன; ஆனால் வேறுபாடு கள் கிடையாது. இந்த உள்ளொளி உலகம் முழுவதும் பரப்பப்பட வேண்டும். அது பாரதத்தின் கடமை. அதற்கு பாரதம் வலிமை மிக்கதாக இருக்க வேண்டும்.

(சென்னையில் 2023 ஜூலை 1 இல் நடந்த ஸ்ரீ ராகவேந்திரா மடத்தின் பொன்விழாவில் மேதகு ஆளுநர் ஆர்.என்.ரவி ஆற்றிய உரையின் சுருக்கம்)

அண்மையில் சென்னையில், செப். 2ஆம் தேதி நடைபெற்ற நிகழ்வு ஒன்று தேசிய அளவில் கவனம் ஈர்த்து, தமிழகத்தில் பல்லாண்டு காலமாக நடத்தப்பட்டு வரும் இனவெறுப்பு அடிப்படையிலான அராஜகப் பிரசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதாக அமைந்திருக்கிறது. அந்த வகையில், முட்டாள்தனமாக அந்த நிகழ்வை ஏற்பாடு செய்த கம்யூனிஸ்ட் அமைப்பினர் நன்றிக்குரியவர்கள்.

## இறைவனின் திருவுள்ளம்

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கலை இலக்கியப் பிரிவான தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள், கலைஞர்கள் சங்கம் (தமுஎகச) கடந்த 2023 செப். 2ஆம் தேதி, சென்னையில், காங்கிரஸ் கட்சிக்கு சொந்தமான காமராஜர் அரங்கத்தில் நடத்திய ‘சனாதன ஒழிப்பு மாநாடு’ தான் அந்நிகழ்ச்சி.

அந்நிகழ்ச்சியில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, தமிழக அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், சேகர்பாபு, திமுக கூட்டணியில் உள்ள பல கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டார்கள்.

அந்த நிகழ்ச்சியில்தான் கிறுக்குத்தனமாக உளறி, தனது ஞானசூனியத்தை வெளிப்படுத்தினார் திமுகவின் இளவரசராக முன்னிறுத்தப்பட்டு வரும் திரு. உதயநிதி ஸ்டாலின். சனாதனம் என்றால் என்னவென்றே தெரியாமல், அந்த மேடையில் சனாதனத்தை ஒழிப்போம் என்று முழங்கியதன் மூலம், நாடு முழுவதும் கண்டனங்கள் குவியக் காரணமாகி இருக்கிறார்.

எந்த மேடைப் பேச்சால் தமிழகத்தை திராவிட இயக்கம் நாசமாக்கியதோ, அதே மேடைப் பேச்சால் அது தனது சவக்குழியில் தானே சென்று படுத்துக் கொள்ளும் நிலை, திமுகவின் இளவரசரின் ஆணவப் பேச்சால் விளைந்திருக்கிறது. இறைவனுக்கு நன்றி!

## எது சனாதனம்?

சனாதனம் நமது பாரம்பரியத்தின் ஆணிவேர் மட்டுமல்ல, மானுடத்தின் மிக ஆழமான அஸ்திவாரமும்கூட.

‘ஆதனம்’ என்றால் எப்போதும் நிலைத்திருப்பது, பன்னெடுங் காலமாக நீடிப்பது, தோன்றிய காலம் தெரியாத பழம்பெருமை வாய்ந்தது என்று பொருள். அதற்கு முன்னொட்டாக இருக்கும் சன்(சம்) என்பது நன்மை என்ற பொருளுடையது. அதாவது, சனாதனம் என்பதற்கு வெறுமனே தொன்றுதொட்டு இருக்கக்கூடிய விஷயம் என்று மட்டும் பொருள் அல்ல, ‘தொன்றுதொட்டு நிலைத் திருக்கும் நல்ல தன்மை’ என்பதே சரியான பொருள்.

நமது வேதங்களும், உபநிஷதங்களும் சனாதனமானவை. அவற்றில் இருந்து கிளைத்தவை தான் இதிகாச - புராணங்களும், தத்துவங்களும். இவற்றை ஆதாரமாகக் கொண்டிருப்பதுதான் சனாதன தர்மம். நமது நாட்டின் பண்பாட்டுக்கும் தேசிய ஒற்றுமைக்கும் வேராக இருக்கும் ஹிந்து தர்மமே 'சனாதனம்' என்று அழைக்கப்படுகிறது. அதாவது, தற்போது ஹிந்து சமயம் என்று குறிப்பிடப்பட்டும் பாரதத்தின் தொன்மையான வாழ்வியல் முறைக்கு பழைய பெயர் சனாதனம்.

'சனாதனம்' என்பது சமஸ்கிருதச் சொல். இதனை தெய்வச் சேக்கிழார் தமிழில் **'வேதநெறி'** என்கிறார்; திருஞானசம்பந்தரின் அவதார நோக்கத்தைச் சொல்லும்போது **'வேதநெறி தழைத்தோங்க - மிகு சைவத் துறை விளங்க'** என்கிறார். தமிழ்த்தாயின் தவப்புதல்வரான மகாகவி பாரதி, இதனை **'வேத வாழ்வு'** எனும் சொல்லால் குறிக்கிறார்; **'வியன் உலகு அனைத்தையும் அமுதென நுகரும் வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்'** என்கிறார்.

ஆனால், தமிழகத்தில் கடந்த ஒரு நூற்றாண்டாக ஒரு குறுங் குழுவினர், இதனை வேறுவிதமாக, தவறாகப் புரிந்துகொண்டு இனவெறுப்பு அரசியலும் துவேஷப் பிரசாரமும் செய்து வருகின்றனர். அதாவது, 'சனாதனம் என்பது பிராமணர்களின் ஆதிக்கத்திற்காக உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு; ஹிந்து மதம் என்பது மூட நம்பிக்கை களின் தொகுப்பு' என்ற விஷமச் சிந்தனை இக்குழுவால் பரப்பப் பட்டது.

## பிரித்தாளும் சூழ்ச்சி:

இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயரின் உதவிக்காக, நாட்டு மக்களைப் பிரித்தாளும் சூழ்ச்சியில் இறங்கிய கிறிஸ்தவப் பாதிரியார்களின் திட்டமிட்ட சதியே, இந்த விஷ விதை. இந்த நாட்டிற்கு பெருமிதம் தரும் எல்லாவற்றின் மீதும் அவநம்பிக்கையை ஏற்படுத்துவதே இதனை நம் மீது திணித்தவர்களின் நோக்கம். அந்த வெறுப்புணர்வு அவர்கள் எதிர்பார்த்தபடியே தமிழகத்தை ஒரு நூற்றாண்டாக பாதித்து வந்திருக்கிறது, ஒரு புற்றுநோய்க் கட்டி போல.

முதலில் ஒட்டுமொத்த இந்தியாவிலிருந்து தமிழகத்தைப் பிரிக்க ஆரிய - திராவிட இனபேதம் உருவாக்கப்பட்டது; பிறகு நாட்டின் அடிப்படையாக இருக்கும் ஹிந்து மதத்தை பலவீனப்படுத்த பிராமணர்- பிராமணரல்லாதோர் என்ற ஜாதிப் பிரிவினை வகுக்கப் பட்டது; ஹிந்தி எதிர்ப்பு, சமஸ்கிருத எதிர்ப்பு, இந்திய விடுதலைக்கு எதிர்ப்பு என, தேசிய ஒருமைப்பாட்டுக்கும் மாநில நலனுக்கும் மாறான விஷமங்கள் தொடர்ந்து அரங்கேறின.

துரதிர்ஷ்டவசமாக, இதனை எதிர்த்து தேசிய பிரசாரத்தை தீவிரமாக நடத்தியிருக்க வேண்டிய இந்திய தேசிய காங்கிரஸ் பல்வேறு காரணங்களால் முடங்கிப் போனது, இந்த குறுங்குழுவுக்கு வசதியாகிவிட்டது; விஷமத் தனமான குறுங்குழு, விரைவில் பெருங்குழுவாகி மாநிலத்தின் ஆட்சியையே கைப்பற்றியும் விட்டது.

தென்னிந்திய நலச் சங்கம், நீதிக் கட்சி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்று நீண்ட இந்த திராவிட பிரிவினை இயக் கத்தின் அரசியல் சுவடுகள், இன்று பெரும் முள்மரமாக வளர்ந்து நிற்கின்றன. ஆனால், இந்த பிரிவினைச் சிந்தனை இன்று அழிவின் விளிம்பில் நிற்கிறது.

## ஆணவ உளறல்:

சமகால அரசியல் சூழல்கள் காரணமாக திமுக 2021இல் மாநிலத்தில் ஆட்சியைப் பிடித்ததே தவிர, அக்கட்சியின் உள்ளார்ந்த பலவீனம் அக்கட்சித் தலைவர்களுக்கு நன்றாகவே தெரியும். தேர்தலின் போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத சூழலில், அதிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்ப திமுக பல நாட கங்களை நடத்துகிறது. அதன் உச்சக்கட்டம் தான் தமுஎகச நடத்திய சனாதன ஒழிப்பு மாநாட்டில் உதயநிதி ஸ்டாலினின் பேச்சு.

சனாதன ஒழிப்பு மாநாட்டில் தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசிய பேச்சு உளறலின் மொத்த வடிவம்.

சனாதன எதிர்ப்பு மாநாடு என்று நடத்தாமல் சனாதன ஒழிப்பு மாநாடு என்ற பெயரில் நடத்துவது சிறப்பு. சிலவற்றை மட்டும்தான் எதிர்க்க வேண்டும். சிலவற்றை ஒழித்தே தீர வேண்டும். கொசு, டெங்கு, மலேரியா, கொரோனா ஆகியவற்றை எதிர்க்க முடியாது, ஒழிக்க வேண்டும். அந்த வகையில், சனாதனத்தை எதிர்ப்பதை விட ஒழிப்பதே சரியானதாகும்.

சனாதனம், சமத்துவத்துக்கும் - சமூகநீதிக்கும் எதிரானது. சனாதனம் என்றால் நிலையானது என அர்த்தம். அதாவது மாற்ற முடியாதது என்றும் சொல்லலாம். எல்லாவற்றையும் மாற்ற வேண்டும், எதையும் கேள்வி கேட்க வேண்டும் என உருவானது தான் திராவிட இயக்கம் என்றெல்லாம் பேசினார் உதயநிதி. இதில் அவர் செய்த தவறு சனாதனம் என்றால் என்னவென்றே தெரியாமல் உளறியது தான்.

## நாடு முழுவதும் எதிர்ப்பு:

தனது பேச்சுக்கு நாடு முழுவதும் கிளர்ந்தெழுந்த எதிர்ப்பைக் கண்டு இப்போது உதயநிதி தத்தளிக்கிறார். கூடியிருந்த முட்டாள்களின்

கரவொலியைப் பெறுவதற்காக, 'சனாதனத்தை ஒழிப்போம்' என்று உளறிவிட்டு, இப்போது, நான் இந்து மதத்தை ஒழிப்பதாகச் சொல்லவில்லை என்று பம்முகிறார் திமுகவின் 'பப்பு'.

சனாதனம் என்றால் இவரது பார்வையில் இந்து மதத்தின் பிற்போக்குக் கருத்துகள். அதாவது பிராமணர்களை உயர்த்தி மற்றவர்களைத் தாழ்த்தும் வர்ணாசிரம தர்மம். ஆனால், நாடு முழுவதும் சனாதனம் என்றால் எவ்வாறு கருதுகிறார்கள் என்ற சிந்தனை கொஞ்சமேனும் வேண்டாமா? சனாதனம் என்றால் உண்மையில் என்ன என்று கூறவோ, அதன் திரிபுகளை உதயநிதிக்கு விளக்கிச் சொல்லவோ திமுகவில் பகுத்தறிவுள்ள ஒரு அறிவாளி கூடவா இல்லை?

உதயநிதியின் பேச்சுக்கு நாடு முழுவதும் கண்டனங்கள் கிளம்பியவுடன், மரப்பிளவில் வால் சிக்கிக்கொண்ட குரங்கு போல கதறிக் கொண்டிருக்கின்றனர் திமுக தலைவர்கள். திமுக அங்கம் வகிக்கும் இந்தியா கூட்டணித் தலைவர்களே உதயநிதியின் பேச்சை ரசிக்கவில்லை. அவர்களுக்குத் தெரியும், இதன் பின்விளைவுகள் தேசிய அளவில் என்னவாகும் என்று. ஆனால், தமிழகத்தில் உள்ள முட்டாள்கள், இன்னமும் உதயநிதி தவறாக ஒன்றும் பேசிவிடவில்லை என்று சாதித்துக் கொண்டிருக்கிறார்கள். விநாசகாலே விபரீத புத்தி!

கலைஞர் என்ற அடைமொழியும் மு.கருணாநிதியும் ஒன்று தான் என்பது திமுகவின் உடன்பிறப்புகள் அனைவருக்கும் தெரியும். இது பிற மாநிலங்களில் உள்ளவர்களுக்குத் தெரியாது. அதுபோல, சனாதனம் என்பதும் ஹிந்து மதம் என்பதும் ஒரே பொருளைக் குறிக்கும் இரு சொற்கள் என்பது திமுகவினருக்குத் தெரியாது. இப்போது தெரிந்துவிட்டதல்லவா? எனவே கம்யூனிஸ்ட்களின் மேடையில் ஏறி அறியாமல் பேசிய பேச்சின் அனர்த்தத்தை உணர வேண்டும்; அதற்காக உதயநிதி தமிழக மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

தவறை உணர்பவனே மனிதன். அப்போது தான் அதைத் திருத்திக் கொள்ளவும், அனுபவ பாடம் மூலம் முன்னேறவும் முடியும்.

## சான்றோர்களின் கண்டனம்:

இந்த சர்ச்சையின் உச்சமாக, தில்லி உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி திங்கரா, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி கோபால்கிருஷ்ணா, மூத்த எழுத்தாளர்கள், ஓய்வு பெற்ற ராணுவ வீரர்கள், சினிமா கலைஞர்கள், பாடகர்கள் என்று 262 பிரபலங்கள் கையெழுத்திட்டு கடிதம் ஒன்றை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட்டுக்கு கடந்த செப். 6ஆம் தேதி எழுதியுள்ளனர்.

''தமிழக அமைச்சர் உதயநிதி பேசிய பேச்சு சம்பந்தமாக உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரித்து அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தக் கருத்துகள் நாட்டின் பெரும்பான்மை மக்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சாக உள்ளது. பாரதத்தை ஒரு மதச்சார்பற்ற தேசமாகக் கருதும் இந்திய அரசியலமைப்பை இந்த வெறுப்புப் பேச்சு தாக்குகிறது...

அழித்தொழிக்கும் வெறுப்புப் பேச்சால் பொது அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்துவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். வெறுப்புணர்வைத் தூண்டும் வகையில் பேசுபவர்கள் மீது அரசு, போலீஸார் தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்யலாம். மாநில அரசு உதயநிதி மீது வழக்குப்பதிவு செய்யவில்லை. அதோடு தமிழகத்தை ஆட்சி செய்வோர் அவரது பேச்சை நியாயப்படுத்தி வருகின்றனர். எனவே உச்சநீதிமன்றமே தானாக முன்வந்து வழக்கு பதிவு செய்து இதனை விசாரிக்க வேண்டும்''

- என்று அவர்கள் இக்கடிதத்தில் கோரியுள்ளனர். இதன்மீது உச்ச நீதிமன்றம் எடுக்கப்போகும் நடவடிக்கைகள் ஒருபுறம் இருக்கட்டும், இதுபோன்ற சூழல்கள் இதற்கு முன்னர் ஏற்பட்டதில்லை என்பதுதான் கவனிக்க வேண்டிய விஷயம்.

இதுகாலம் வரை, அறிவுஜீவிகள், முற்போக்குவாதிகள் என்ற பெயரில் கம்யூனிஸ்ட்களால் தூண்டப்பட்ட சிலர் தான் பாஜக உள்ளிட்ட வலதுசாரிகளுக்கு எதிராக, இவ்வாறு ஒன்றாகத் திரண்டு தலைமை நீதிபதியிடம் மனு அளிப்பது வழக்கமாக இருந்து வந்தது. இப்போது தேசத்தின் மனநிலை மாற்றம் காரணமாக, இந்தக் காட்சியும் மாறி இருக்கிறது.

தவிர, திமுகவின் கூட்டணித் தோழர்களாக இருந்தபோதும், உதயநிதியின் முட்டாள்தனமான உளறலை, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, தில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால், காங்கிரஸ் மூத்த தலைவர் கரண் சிங் உள்பட பல அரசியல் தலைவர்கள் கண்டித் துள்ளனர்.

மேலும், பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோரும், பாஜக ஆளும் மாநிலங்களின் முதல்வர்களும், பல துறவியர் பெருமக்களும் உதயநிதியின் ஆணவப் பேச்சைக் கண்டித்திருக்கின்றனர்.

''உதயநிதியின் சனாதன ஒழிப்புப் பேச்சுக்கு எதிராக பாஜக அமைச் சர்கள் தீவிரமாக பதிலடி கொடுக்க வேண்டும்'' என்று பிரதமர் மோடி தனியே உத்தரவிட்டிருக்கிறார்.

## திருந்தாத ஜென்மங்கள்:

இத்தனைக்குப் பின்னரும் உதயநிதி, ஆமாம் நான் பேசியது சரிதான். பின்வாங்கும் பேச்சுக்கே இடமில்லை என்று பேசிக் கொண்டிருக்கிறார். இவர் பேசவில்லை, இவரது 'ஜீன்' பேசுகிறது.

இவரது பாட்டனார் திரு. மு.கருணாநிதி பேசாத பேச்சா? ''தில்லை நடராஜரையும் சீரங்கநாதரையும் பீரங்கி வைத்துப் பிளக்கும் நாள் எந்நாளோ?'' என்று மேடையில் பேசியவர் கருணாநிதி. ''ஏரோட்டும் மக்களெல்லாம் ஏங்கித் தவிக்கையிலே தேரோட்டம் ஏனுனக்கு தியாகராசா?'' என்று மேடையில் பாடியவர் அவர்.

இந்து என்றால் திருடன் என்று பொருள் என்று சொல்லிவிட்டு, அவ்வாறு வெளிநாட்டினர் யாரோ எழுதிய அகராதியில் இருப்பதாக அழிச்சாட்டியம் செய்தவரும் அவர்தான்.

தனது கட்சி எம்எல்ஏ ஒருவர் (கள்ளக்குறிச்சி ஆதிசங்கர்) நெற்றியில் வைத்திருந்த குங்குமத் திலகத்தைப் பார்த்து நெற்றியில் என்ன ரத்தம் வழிகிறதா என்று கேலி பேசியவரும் அவரே.

'இந்துமதம் என்று ஒன்றே கிடையாது; இலங்கைக்கு பாலம் கட்டியதாக கூறப்படும் ராமன் எந்த என்ஜினீயரிங் கல்லூரியில் படித்தான்?' என்றெல்லாம் பகடி செய்தவரும் தான் அவர்.

ஆனால் அந்தக் காலம் வேறு. இன்று போலவே அன்றும் ஊடகங்களில் பெரும்பாலானவை திராவிட அடிவருடிகளாக இருந்தன. மக்களின் எதிர்ப்பு அப்போது பெரும் வினையாற்றவில்லை. ஆனால் இன்று அப்படியல்ல. உதயநிதி ஸ்டாலினின் பேச்சுக்குப் பதிலடியாக 'சன் டிவியைப் புறக்கணிப்போம்' என்ற பிரசாரம் சமூக ஊடகங்களில் அதி தீவிரமாக நடந்துகொண்டிருக்கிறது. இது உண்மையான ஜனநாயகம் மிகுந்த சமூக ஊடகங்களின் காலம்.

இன்றைய இளைஞர்கள், தொழில்நுட்பத்தின் உதவியுடன் திமுகவின் முகத்திரைகளைக் கிழித்து தோரணமாகத் தொங்க விடுகிறார்கள். எனவே முன்பு போல எதையாவது உளறிவிட்டு, 'அப்படி நான் சொல்லவில்லை; நான் சொன்னதன் அர்த்தம் வேறு' என்றெல்லாம் ஜகா வாங்க முடியாது.

கிறிஸ்தவர்களின் விழாவில் பங்கேற்று எனது மனைவி கிறிஸ்தவர். எனவே நானும் கிறிஸ்தவர் என்று உதயநிதி அளித்த வாக்குமூலம் இணையத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறது. இந்த பகிரங்க ஊடக உலகில் எதையும் மறைக்கவோ, மறக்கச் செய்யவோ முடியாது.

தமிழகத்தில் ஹிந்துக்கள் வாக்களிக்காமலா திமுக ஆட்சிக்கு வந்தது? தேர்தலின்போது நாங்களும் ஹிந்துக்கள் தான் என்று பேசுவது; வென்ற பிறகு தனது உண்மையான சுயரூபத்தைக் காட்டுவது என திமுகவின் இரட்டை வேடம் தொடர்கிறது. இந்த நாடகம் நீண்ட காலத்துக்கு நிலைக்காது.

## திமுகவின் தேர்தல் கணக்கு:

இந்நிலையில், உதயநிதியைக் கண்டித்து முறைப்படுத்தாமல், அவருக்கு வக்காலத்து வாங்குகிறார் அவரது தந்தையும் மாநில முதல்வருமான திரு. மு.க.ஸ்டாலின். தான் மாநில மக்கள் அனைவருக்குமான முதல்வர் என்பதை அவர் உணர்ந்திருக்கிறாரா என்றே தெரியவில்லை.

தமிழகத்தில் சுமார் 20 சதவிகிதம் இருக்கக் கூடும் என்று கருதப் படும் கிறிஸ்தவர்கள், கிறிப்டோ கிறிஸ்தவர்கள் (அரசு சலுகைக்காக ஹிந்துப் பெயரில் ஒளிந்திருக்கும் கிறிஸ்தவர்கள்), இஸ்லாமியர்கள் ஆகிய சிறுபான்மையினரின் ஆதரவு மட்டும் இருந்தால் போதும், தேர்தலில் வென்று விடலாம் என்ற தெளிவான அரசியல் கணக்குடன் தான் மு.க.ஸ்டாலின் இயங்கி வருகிறார்.

இந்த மைனாரிட்டி 20 சதவிகிதத்துடன் கட்சி சார்பு ஓட்டுகள், ஜாதிரீதியாகப் பிளவுபடும் ஓட்டுகள், பாஜக எதிர்ப்பு ஓட்டுகள், கூட்டணி வலுவால் கிடைக்கும் ஓட்டுகளின் கூடுதல் துணை கொண்டு எளிதாக வென்று விடலாம் என்ற கணக்கின் அடிப்படையில் தான், திமுக முரண்டு பிடிக்கிறது.

உதயநிதியின் இந்த அநாகரிகப் பேச்சை ஆதரித்தும், சனாதனத்தைக் கேவலப்படுத்தியும் சமூக ஊடகங்களில் எழுதுவோரில் பெரும்பகுதியினர் மைனாரிட்டி சமுதாயத்தினராக இருப்பதைக் காணும்போது, திமுகவின் தேர்தல் கணக்கு புரிகிறது.

ஆனால், காலம் மாறிவிட்டது என்பதை திரு. ஸ்டாலின் இன்னமும் உணரவில்லை. அவரது கால்களுக்குக் கீழே திராவிட நிலம் நழுவிக் கொண்டிருக்கிறது. அவரது தலைக்கு மேலே, அவரும் அவரது குடும்பத்தினரும் செய்த பாவங்களின் சுமை கத்தியாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது.

'இந்தியா' கூட்டணியின் அடுத்த கூட்டம் பிற மாநிலங்களில் நடக்கும்போது அதில் கலந்துகொள்ள மு.க.ஸ்டாலின் செல்கையில் இந்த வேறுபாட்டை உணர்வார். உதயநிதி மீது நாடு முழுவதும் பல இடங்களில் வழக்குகள் பதிவாவது தனிக் கதை.

## இது பழைய காலமல்ல:

*இதே தமிழகத்தின் சேலத்தில் 1968இல் ஸ்ரீராமர் படத்துக்கு செருப்பு மாலை அணிவித்து ஊர்வலம் நடத்தினர் தி.க. குண்டர்கள். விநாயகர் சிலைகளை நடு ரோட்டில் உடைத்து, அரசு ஆதரவுடன் தங்கள் பகுத்தறிவை அவர்கள் வெளிப்படுத்தி மார்தட்டியபோது பக்திமான்களான ஹிந்துக்கள் செய்வதறியாது மனம் புழுங்கினர்.*

*ராமாயணத்துக்கு எதிராக 'கீமாயணம்' எழுதிப் படித்து மகிழ்ந் தார்கள் சில கிறுக்கர்கள். திமுக நிறுவனரான சி.என். அண்ணா துரையே, 'கம்பரசம்' என்ற பெயரில் ஆபாச நூல் எழுதினார். இவர்களது குலகுருவான (பெரியார் என்று திராவிட பக்தர்களால் அழைக்கப்படும்) திரு. ஈ.வெ.ராமசாமி நாயக்கர், வாழ்நாள் முழுவதும் ஹிந்து மதத்தையும் இந்திய நாட்டையும் பிராமணர்களையும் துவேஷித்தே வாழ்ந்து மறைந்தார்.*

*அவரது அடியொற்றி, ராமாயணத்துக்கு மாற்றாக புலவர் குழந்தை என்ற பிராமண வெறுப்பாளர் எழுதிய 'ராவண காவியம்' நூலை பள்ளிப் பாடமாக ஆக்கி மகிழ்ந்தார்கள் திமுகவினர்.*

*'ஆபாசத்தில் சிறந்தது மகாபாரதமா, ராமாயணமா?' என்று திகவினர் திமுக அரசின் ஒத்துழைப்புடன் 1989-90களில் தமிழகம் முழுவதும் பட்டிமன்றம் நடத்தினர்.*

*ஆவணி அவிட்ட நன்னாளில் பன்றிக்குப் பூணூல் அணிவிப்பது, தெருவில் செல்லும் பிராமணர்களின் குடுமியை அறுப்பது, பூணூலை அறுப்பது என்று, கடவுள் மறுப்பாளர்கள் என்ற பெயரில் தி.க. குண்டர்கள் ஆடிய ஆட்டம் கொஞ்சமா, நஞ்சமா? இவை அனைத்தும், இந்தியா கூட்டணியில் இருக்கும் திமுகவின் கூட்டாளிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டாலே போதும், திமுகவின் ஆணவ ஆட்டம் அடங்கிப் போகும்.*

## பாடம் கற்காத திமுக:

*இஸ்லாமிய அடிப்படைவாதிகளுடனான திமுகவினரின் நெருக் கத்தால் தான் தமிழகத்தில் இஸ்லாமிய பயங்கரவாதம் வளர்ந்தது. அதன் கோரவிளைவை 1998 பிப். 14-இல் நிகழ்ந்த கோவை தொடர் குண்டுவெடிப்புகளாகக் கண்டோம்.*

*தனித் தமிழ்நாடு பிரிவினைவாதிகளுடனான திமுகவினரின் இணக்கத்தால் தான், இங்கு தனிமாநில பிரிவினைவாதம் வளர்ந்தது. அதற்கு நாம் நமது முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை தமிழகத்தின் ஸ்ரீபெரும்புதூர் மண்ணில் 1991 மே 21இல் பலி கொடுத்தோம்.*

இன்று போலி பகுத்தறிவு பேசும் திராவிடர் கழகம், கம்யூனிஸ்ட் இயக்கங்களுடனான திமுகவினரின் கூடா நட்பால், தமிழகம் மீண்டும் என்னவாகப் போகிறதோ என்ற அச்சம் ஏற்படுவது இயற்கையே.

வரலாற்றிலிருந்து பெறும் படிப்பினைகளிலிருந்து பாடம் கற்றுத் திருந்தாதவர்களை வரலாறு தண்டிக்கும். கடவுளை நிந்திப்பதும், பண்பாட்டை அவமதிப்பதும் இன்று திமுகவினருக்கு தற்காலிக லாபமாகத் தெரியலாம். இதற்கான நிரந்தரப் பலனை அவர்கள் விரைவில் பெறத்தான் போகிறார்கள்.

## திராவிட மாடல் சமூக நீதியின் அவலட்சணம்:

'பிறப்படிப்படையிலான ஏற்றத் தாழ்வு தான் சனாதனம்' என்று சொன்னார் உதயநிதி. 'அது கொசு டெங்கு மலேரியா போல. அது ஒழிக்கப்பட வேண்டும்.' என்கிறார்.

அவர் எப்படி அமைச்சரானார்? அவரை விட அனுபவமும் களப் பணியும் செய்த கழக தொண்டர்கள் பலர் இருக்க அவர் எப்படி அமைச்ச ரானார்?

அவரை விட வயதில் முதிர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் இதரர் களும் அவரிடம் வந்து முதுகு வளைய வணங்க அவர் எப்படி முக்கிய தலைவரானார்?

அவரை விட கல்வித் தகுதியில் மிகுந்த முன்னாள் நிதியமைச்சர் கால் கடுக்க நிற்க அவர் எப்படி அமர்ந்திருந்தார், அமைச்சரவை புகைப் படத்தில்?

ஒரே காரணம். அவர் தந்தையார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். அவர் பாட்டனார் முத்துவேல் கருணாநிதி.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான சனாதன தர்மத்தில் வந்த ஒவ்வொரு ஆன்மிகத் தலைவரும் பிறப்படிப்படையில் அந்த இடத் துக்கு வரவில்லை. எல்லா சாதிகளிலிருந்தும் தோன்றினார்கள். ஆனால் இவர்கள் சாதியை ஒழிக்கிறேன் என்று கழகம் தோன்றி நூறு ஆண்டுகள் கூட ஆகவில்லை. நாஞ்சில் மனோகரன் 'கருவின் குற்றம்' என்று கவிதை எழுத வேண்டியிருந்தது.

எனவே, எது டெங்கு, எது காலரா, எது மலேரியா, எது ஒழிக்கப்பட வேண்டியது என்பது யோசிக்க வேண்டிய விஷயம்.

மேலும் டில்லியில் எந்த அரசாங்க பதவியிலும் இல்லாத நூபுர் சர்மா என்ற பெண்மணி ஒரு ஆங்கில தொலைக்காட்சி விவாதத்தில் இந்து மதத்தின் மீது அவதூறு பேசிய ஒரு முஸ்லிம் மதவெறியனுக்கு பதிலடி கொடுக்க இஸ்லாம் பற்றி ஒருவிஷயம் பேசியதற்கு இங்கே

*இருக்கின்ற மதவெறி கும்பல், நடுநக்கிகள், இடது சாரி, நக்சல்கள் மட்டும் இல்லாமல் உலகமே நூபுர் சர்மாவுக்கு எதிராக கொந்தளித்தது அந்த பெண்மணியின் தலைக்கு பல கோடி பரிசு தொகை அறிவித்தார்கள். அதுதான் மதப்பற்று*

*ஆனால் இங்கே ஒரு தமிழ்நாட்டு அமைச்சர் ஒருத்தர் மேடை போட்டு வேண்டுமென்றே இந்து மதம் பத்தி இவ்வளவு அவதூறாக பேசியும் அவருக்கு முட்டு கொடுத்துட்டு இருக்கிறது ஒரு மானங் கெட்ட கூட்டமும் மதவெறி கூட்டமும்.*

*வாழ்க பகுத்தறிவும் கூடவே ஊசிப்போன மசால் வடையும்.*

## சமத்துவத்துக்கு எதிரானதா சனாதனம்?

*இப்போது மீண்டும் சனாதனத்துக்கு வருவோம்.*

*இந்த உலகில் பிறந்த அனைவரும் சமம் என்று கூறும் சனாதனம் எவ்வாறு சமத்துவத்துக்கு எதிராகும்? இந்த உலகமே ஒரு குடும்பம் என்று கூறும் 'வசுதைவ குடும்பகம்' என்ற உயர் தத்துவத்தைக் கூறும் சனாதனம் எவ்வாறு சமூகநீதிக்கு எதிரானதாகும்?*

*இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்க இதுநாள் வரையிலும் தடையின்றிப் பரப்பப்பட்ட தவறான கருத்துகளை ஆய்வு செய்ய வேண்டும். திராவிட இயக்கத்தின் கருத்துப்படி, சனாதனமே, அதாவது ஹிந்து சமயமே இந்நாட்டில் இன்று நிலவும் ஜாதிப் பாகுபாடு களுக்கும் தீண்டாமைக்கும் காரணம். இது பிராமணர்களுக்கு உயர்வை அளிப்பதற்காக ஆரியர்கள் நம் மீது திணித்த சூழ்ச்சி. எனவே பாகுபாடுகளை ஒழிக்க வேண்டுமானால் ஆரியத்தை, சனாதனத்தை, பிராமணியத்தை, ஹிந்து சமயத்தை ஒழிக்க வேண்டும். இதையே வேறு வேறு வண்ணம் பூசப்பட்ட சொற்களில் சொல்வார்கள். இந்தக் கருத்து களில் உண்மை இருக்கிறதா?*

*பிறப்பை மட்டும் வைத்து ஒருவர் அறிஞராக வரக் கூடியவரா, செயல்வீரராக வரக் கூடியவரா, வணிகராக வரக் கூடியவரா அல்லது தம் உழைப்பினால் உலகத்தை உயர்த்தும் உழைப்பாளியாக வரக் கூடியவரா என்பதைத் தீர்மானிக்கக் கூடாது. அப்படி இருந்திருந்தால், டாக்டர் அம்பேத்கர் நம் அடிப்படைச் சட்டத்தை வடிவமைத்த அறிஞராக இருந்திருக்க முடியாது.*

## முன்னோர் அமைத்த பாதை!

*விலங்குகளுடன் போட்டியிட்டு ஆடையின்றித் திரிந்த மனிதன், தனது ஆறாவது அறிவால், சிந்தனைத் திறனால், காடு திருத்தி நாடாக்கினான். விவசாயம் செய்து உணவைப் பெருக்கினான். ஆடை*

அணிந்து நாகரிகம் சமைத்தான். தனது அறிவின் பெருக்கத்தால் கிராமமும் நகரமும் கண்டான். குடியிருக்க குடிசை அமைத்து அந்தப் பாதையை மதில் சூழ் மாளிகையாக்கினான். பிறகு தங்களுக்குள் நிலவிய மோதல்களைக் கட்டுப்படுத்த மன்னராட்சி என்ற பெயரில் மக்கள் தலைவனை உருவாக்கினான். அதற்கு உதவும் வகையில் தனக்கான சட்டங்கள், விதிமுறைகளை தானே உருவாக்கி கொண்டான். சமுதாயத்தை நெறிப்படுத்த சமயம், வழிபாடுகளையும் அவனே உருவாக்கினான்.

இந்த பல்லாயிரம் ஆண்டுகால மானுட நதிப் பிரவாஹம், இன்றைய குடியாட்சி வரை நீண்டிருக்கிறது. இன்றைய மனிதன் தனது விஞ்ஞான அறிவால் அகிலத்தையே ஆள்கிறான்.

கடந்து வந்த இப்பாதையில் பல முன்னேற்றங்களும் பின்னடைவு களும் இருந்துள்ளன. அந்த அனுபவத்தின் மீது தான் நாம் வாழும் சமுதாயம் அமைந்திருக்கிறது. அதாவது இன்று நாம் நடை பயிலும் சாலை, இன்று நேற்றல்ல, பல்லாயிரம் ஆண்டுகளாக எவர் எவரோ அமைத்த பாதை.

இந்தப் பாதையில் சில முள்மரங்களும் இருக்கலாம். அவற்றை அப்புறப்படுத்திவிட்டு வருங்கால சந்ததியினரிடம் அதனை வழங்கி விட்டுச் செல்வதே நமது கடமை. அதை மறந்து, அந்த முள்மரங் களுக்குக் காரணமாக நமது முன்னோரையே குற்றம் சாட்டிக் கொண்டிருப்பது, புத்திசாலித்தனமான செயல் அல்ல.

இங்கு தான் திராவிட இயக்கத்தினர் தவறிழைக்கின்றனர். அவர்கள் இந்த சமுதாயத்தில் நிலவும் அத்தனை சீர்கேடுகளுக்கும் சனாதனமே காரணம் என்கிறார்கள். அதிலும், இந்த நாட்டை ஆயிரம் ஆண்டுகளாக கட்டுப்படுத்தி வந்த மனு ஸ்மிருதியே காரணம் என்பது இவர்களின் கண்டுபிடிப்பு.

## ஸ்மிருதிகள் மாற்றத்துக்குரியவை:

ஸ்மிருதி என்பது மாற்றத்துக்குரிய சட்ட நடைமுறைகள் ஆகும். இந்நாட்டில் பல ஸ்மிருதிகள் நடைமுறையில் இருந்துள்ளன. அத்ரி முதல் வசிஷ்டர் வரையிலான 18 முனிவர்களால் வகுக்கப்பட்ட ஸ்மிருதிகள் இருந்துள்ளன. யாக்ஞ்வல்கிய ஸ்மிருதியும் மனு ஸ்மிருதியும் கடைசியாக உருவானவை. இவை மக்களின் வாழ்வியல் ஒழுக்கத்துக்காக வடிவமைக்கப்பட்டவை.

காலந்தோறும் மக்களின் வாழ்க்கை மாறுவதற்கேற்ப சமுதாயமும் மாறுகிறது. அதற்கேற்ப சமுதாயத்தை கட்டுப்படுத்தும் சட்டங்களும் (ஸ்மிருதிகள்) மாற்றம் பெறுகின்றன.

*1950இல் இயற்றப்பட்ட நமது இந்திய அரசியல் சாசனம், இது வரை பல திருத்தங்களைக் கண்டிருக்கிறது. அடிப்படைக் கட்டமைப்பை மாற்றாமல் இதனைத் திருத்துவதற்கு அரசியல் சாசனமே அனுமதி அளிக்கிறது. அதுபோலவே நமது ஸ்மிருதிகளும் மாறி வந்துள்ளன. இதில் கடைசியாக வருவதே மனு ஸ்மிருதி.*

*ஸ்மிருதிகள் மாற்றத்துக்குரியவை. ஆனால் மானுட வாழ்வில் எந்த மாற்றமும் இல்லாதவை ஸ்ருதிகள். பாரதத்தின் ஞானக் கருவூலமான நான்கு வேதங்கள், பன்னிரு உபநிடதங்கள், பிரம்மசூத்திரம் ஆகியவையே ஸ்ருதிகள். இந்த மாபெரும் பிரபஞ்சத்தின் மெய்ப்பொருளை விளக்குபவை இவை.*

## இன்றைய ஜாதி முறை:

*வர்ண ஏற்பாடு பிற்காலத்தில் பிறப்பின் அடிப்படையிலான குழுக்களாக மாறிய பின் ஜாதி முறை உருவாகி விட்டது. அதுவும் தொழில் அடிப்படையில் இவை நிலைகொண்டுவிட்டன. இவை காலப்போக்கில் உருவானவையே தவிர, இவற்றை உருவாக்கிய சிற்பி என எவரும் தனியே இல்லை.*

*இன்று புழக்கத்தில் உள்ள நூற்றுக்கணக்கான ஜாதிப் பிரிவுகளுக்கும், சனாதன தர்மத்துக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. இந்த ஜாதிப் பிரிவுகளுக்கும் நால்வர்ணக் கோட்பாட்டுக்கும், நான்கு ஆஸ்ரம தர்மத்துக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.*

*இன்று அனைவருக்கும் அனைத்து வாய்ப்புகளும் உள்ள நிலையில் ஒருவர் எந்த தொழிலில் ஈடுபடுவது என்பது அவரவர் திறமை, விருப்பம் சார்ந்ததாக மாறி இருக்கிறது.*

*இன்றைய ஜாதிமுறை, குடும்ப உறவுகளாலும், சமூக கட்டமைப்பாலும் தான் நிலை பெற்றுள்ளனவே தவிர, முந்தைய ஸ்மிருதிகள் இதற்குக் காரணம் அல்ல. சொல்லப்போனால் அம்பேத்கரால் வடிவமைக்கப்பட்ட 'பீம ஸ்மிருதி'யின் காலத்தில் இப்போது நாம் வாழ்கிறோம்.*

## குறள் கூறும் நேறி:

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்**

*- என்பது தெய்வப்புலவர் திருவள்ளுவரின் குறள் (972).*

*எல்லா உயிர்களும் பிறக்கும் போது ஒரே தன்மை உடையவை தான். ஆயினும் தொழில் வேறுபாட்டால் அந்த உயிர்களின் பெருமை-*

*சிறுமை போன்ற சிறப்பு இயல்புகள் ஒரே மாதிரி அமைவதில்லை என்பதே இக்குறளின் பொருள்.*

*இக்குறளின் முதல் பகுதியை மட்டும் மேடையில் முழங்கிவிட்டு, பிற்பகுதியை முழுங்கிவிடுதல் திராவிட இயக்கத்தினரின் வழக்கம். இக்குறளில் திருவள்ளுவர் கூறுவதும் சனாதனத்தின் இயல்பான கருத்தே. இறைவனின் படைப்பில் அனைவரும் சமமே. ஆனால், அவரவர் தொழிலின் அடிப்படையில் மாறுபடுகின்றனர் என்ற திருவள்ளுவரின் கருத்து ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழக சமுதாயச் சூழலைப் பிரதிபலிக்கிறது.*

*எனவே மனிதரின் இன்றைய வேற்றுமைக்கு நமது சனாதன நெறி களைக் குற்றம் சாட்டாமல், சமூக வரலாற்றின் வளர்ச்சிநிலையாகக் காண வேண்டும். மாறியுள்ள சூழலில் தேவையான சீர்திருத்தங்களை நமக்கு நாமே செய்துகொள்ள வேண்டும்.*

## மகாகவி பாரதியின் விளக்கம்:

*வாழ்க்கை முறைகள் அடிக்கடி மாறக் கூடியவை. ஸ்மிருதிகளுக்கு (மக்களால் மக்களுக்காக உருவக்கப்படும் சட்டங்கள்) நிலையான முக்கியத்துவம் எப்போதுமே இருந்ததில்லை. இதை மகாகவி பாரதி மிகத் தெளிவாகச் சொல்லுகிறார்.*

**பின்னும் ஸ்மிருதிகள் செய்தார்– அதைப்**
**பேணும் மனிதர் உலகினில் இல்லை.**
**மன்னும் இயல்பின அல்ல– அவை**
**மாறிப் பயிலும் இயல்பின ஆகும்.**

*இதன்மூலம், மக்களைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் நிலையான தன்மை கொண்டவை அல்ல; காலத்திற்கேற்ப மாறிக்கொண்டே இருக்கக் கூடியவை என்பது புலப்படும். எனவே எப்போதோ சமூகத்தைக் கட்டுப்படுத்திய, ஒரு காலகட்டத்தின் சட்டத் தேவையாக இருந்த மனு ஸ்மிருதியை இன்றைய நமது குறைபாடுகளுக்குக் காரணமாக்காமல், உண்மையை ஆராய்ந்து அறிய வேண்டும்.*

*தமிழின் மூதன்னை ஒளவையார் 'ஜாதி இரண்டொழிய வேறில்லை' என்று பாடி இருப்பதைக் காணும்போது அக்காலத்தில் ஜாதிக் கட்டமைப்பு இருந்ததைப் புரிந்துகொள்ள முடிகிறது. 'இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்' என்று அவர் குறிப்பிடும்போது, சமூக மாற்றத்திற்கான அவரது விழைவும் தெரிகிறது.*

*இதனையே மகாகவி பாரதியும் வேறுவிதமாகக் குறிப்பிடுகிறார்:*

**சாதி இரண்டொழிய வேறில்லை என்றே**
**தமிழ் மகள் சொல்லிய சொல் அமிழ்த மென்போம்!**

**நீதி நெறியில் நின்று பிறர்க்குதவும்**
**நேர்மையர் மேலவர், கீழவர் மற்றோர்.**

*இன்று நமது நாடு பல துறைகளிலும் முன்னேறி வருகிறது. நாட்டில் சமூக ஏற்றத் தாழ்வுகள் மங்கி வருகின்றன. எனினும், நமது இலக்கு, 'அனைவரும் சமம்' என்ற ஒப்பற்ற சமுதாய இலக்கு.*

## நமது கடமை:

**'லோகா சமஸ்தா சுகினோ பவந்து; சர்வே ஜனா சுகினோ பவந்து'** *என்கிறது வடமொழி. இதனையே 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே' (தாயுமானவர்) என்கிறது தமிழ் நெறி.*

**'யாதும் ஊரே யாவரும் கேளிர்'** *என்கிறது கணியன் பூங்குன்றனாரின் சங்கத் தமிழ். அப்பாடலின் அடுத்த வரி,* **'தீதும் நன்றும் பிறர் தர வாரா'** *என்பதே. எனவே, நம்மை நாமே சரிசெய்து கொள்ள உதயநிதியின் உளறல் பேச்சு உதவட்டும்.*

*எந்த ஒரு தீமையிலும் நன்மை இருக்கும். அதன்படி, இன்றைய திமுகவினரின் உளறல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க, அற்புதமான நமது சமுதாயத்தை பலவீனமின்றி ஒருங்கிணைக்க, 'இந்த நாடு முழுவதும் ஒன்று, இந்த நாட்டு மக்கள் அனைவரும் சகோதரர்கள்' என்ற எண்ணத்தை வலுப்படுத்த, தேசபக்தர்கள் ஒன்றிணைவோம்!*

*இதுவே நமது கடமை. சனாதனம் காக்கும் பணியில் நமது இலக்கு, மகாகவியின் வைர வரிகளை நிதர்சனமாக்குவதே. இதோ அந்த காவிய வரிகள்:*

**எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன்**
**என்றுரைத்தான் கண்ண பெருமான்,**
**எல்லாரும் அமரநிலை எய்தும்நன் முறையை**
**இந்தியா உலகிற் களிக்கும் – ஆம்**
**இந்தியா உலகிற் களிக்கும் – ஆம் ஆம்**
**இந்தியா உலகிற் களிக்கும் – வாழ்க!**
**எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்**
**எல்லாரும் இந்திய மக்கள்,**
**எல்லாரும் ஓர்நிறை எல்லோரும் ஓர்விலை**
**எல்லாரும் இந்நாட்டு மன்னர் – நாம்**
**எல்லாரும் இந்நாட்டு மன்னர் – ஆம்**
**எல்லாரும் இந்நாட்டு மன்னர் – வாழ்க!**
**பாரத சமுதாயம் வாழ்கவே! – வாழ்க வாழ்க!**
**பாரத சமுதாயம் வாழ்கவே! – ஜய ஜய ஜய** — மகாகவி பாரதி

# இதுவல்லவா சனாதன ஹிந்து தர்மம்!

❖ கடவுள் மறுப்பை மட்டுமே பிரதானமாக வலியுறுத்தினார் ஈ.வெ.ரா. ஆனால் திருமூலரோ ‘‘படமாடுங் கோயிலில் உறையும் இறைவர்க்கு ஒன்றை அளித்தால், அது நடமாடுங் கோயிலான மனிதர்க்கு, வறியவர்க்கு சென்று சேராது. நடமாடுங் கோயிலான மனிதர்க்கு அளித்தால், அது படமாடுங் கோயில் இறைவனைச் சென்றடையும்’’ என்கிறார். இறை மறுப்பைப் போதிக்காமல் மனிதநேயம் போதித்தார் திருமூலர். இதுதான் சனாதன ஹிந்து தர்மம்.

❖ ஐந்து கடமைகளை சனாதனம் வகுத்துத் தந்திருக்கிறது. தேவ யக்ஞம், ரிஷி யக்ஞம், மனுஷ்ய யக்ஞம், பித்ரு யக்ஞம், பூத யக்ஞம் - இந்த வடமொழிச் சொற்களுக்கு ‘‘இறைவனுக்குச் செய்வது, துறவிகளின் சொற்களைக் கேட்பது, பசியால் வாடி வருபவருக்குப் பிடி உணவு தருவது, இறந்தவர்களுக்குச் செய்யும் நீத்தார் கடன், விலங்குகளை மதித்து பாதுகாப்பளிப்பது’ என தமிழில் பொருள் கொள்ளலாம். திருவள்ளுவ பெருமானும் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை’’ என்று இல்லறத்தாருக்கு இதே அறிவுரை கூறியுள்ளார்.

❖ எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ண வேண்டும் என்று பாடிய வடலூர் வள்ளலார் வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன் என்று அதை தன் வாழ்க்கையில் நடந்து காட்டினார். இவ்வாறு சொல் செயல் சிந்தனை ஒன்றாக இருப்பது சனாதன ஹிந்து தர்மம் கூறும் உயர்ந்தோர் பண்பு.

❖ ‘‘நோயிலே படுப்பது என்னே நோன்பிலே உயிர்ப்ப தென்னே’’ என்பது பாரதியார் கவிதை. நோன்பிருந்து நோயைத் தீர்த்துக் கொள்வது மட்டுமில்ல, நோன்பிருந்து நல்ல மகப்பேறு அடைவது சனாதனம். ‘‘ஆறிரண்டும் காவேரி, அதன் நடுவே சீரங்கம், சீரங்கமாடி திருப்பாற்கடலாடி, எட்டாத கோவிலுக்கு எட்டி விளக்கேற்றி, வெள்ளி முழுகி, வெகுநாள் தவமிருந்து, தைப்பூசமாடி தவம்பெற்று வந்தவனே’’ என்று தமிழ் பெண் பாடும் தாலாட்டு அதே சனாதன ஹிந்து தர்ம வாழ்வியலை சித்தரிக்கிறது.

❖ பெருநகரம் என்பது மானாம்பதியை அடுத்த குக்கிராமம் அதன் அருகில் ஒரு நெடுஞ்சாலை அதை அந்த ஊர்மக்கள் காசி - ராமேஸ்வரம் நெடுஞ்சாலை என்று போற்றுகிறார்கள். இத்தனைக்கும் காசியும் அருகில் இல்லை, ராமேஸ்வரமும் அருகில் இல்லை. இரண்டும் மக்கள் மனதில் கோயில் கொண்டிருக்கிறது. இமயம் முதல் குமரி வரை என் தேசம் என்ற உரிமை உணர்வு தருவது சனாதன ஹிந்து தர்மம்.

அழியாத வாழ்வின் விஞ்ஞானத்தை நமக்கு அளிப்பது சனாதன ஹிந்து சமயம் என்பது அருட்பிரகாச வள்ளலாரின் வார்த்தைகள். அவை வருமாறு:



''ஹிந்து வேதாகமங்களில் மாத்திரந்தான் ஏமசித்தி, ஞானசித்தி முதலிய சித்திகளைச் சொல்லியிருக்கின்றது. மற்ற எந்த சமயங்களிலும் மேற்படி சித்திகளையும் சாகாத கல்வியையும் சொல்லவில்லை. ஒருவேளை அப்படியிருக் கிறதாகக் காணப்படுமாகில் அது இந்து வேதாகமங்களில் சொல்லியிருப்பதின் ஏகதேசங்களென்பது உண்மை.''

எனவே ஹிந்து வேதாகமங்கள் சாகாக் கல்வியை கொடுக்கின்றன என்பதை வள்ளலார் சொல்லுகிறார் என்பதுடன், அதே சாகாக்கலையை அளிக்கும் சாதனையை சுத்த சமரச சன்மார்க்கம் என்றும் சொல்லுகிறார் என்றால், சனாதன தர்மமும் சன்மார்க்க நெறியும் கூறுவது ஒன்றே என்பது தெளிவாகிறது.



சுவாமி விவேகானந்தர் 1893-ல் சிகாகோவில் நடந்த உலக மதங்களின் பாராளுமன்றத்தில், ''அனைத்து மதங்கள் மற்றும் நாடுகளில் இருந்து துன்புறுத்தப் பட்ட மக்களுக்கு அடைக்கலம் கொடுத்த ஹிந்துஸ்தானத்திலிருந்து நான் வந்திருக்கிறேன் என்றும் சனாதன தர்மம் அனைத்து மதங்களுக்கும் தாய்'' என்றும் கூறினார். சகிப்புத்தன்மை மற்றும் உலகளாவிய ஏற்றுக்கொள்ளல் ஆகியவற்றின் விதைகளை தனது தாய்நாடும் சனாதன மதமும் விதைத்ததாக அவர் பெருமிதம் கொண்டார்.



சனாதன தர்மம் என்பது கிணற்றுத் தவளையைப் போன்றதல்ல. அது கடலைப் போல மிகப் பெரியது! மிகவும் ஆழமானது! இதை எந்தப் பெயரில் அழைத்தாலும் சரி, அது மனித குலத்திற்கே சொந்தமானது என 1947இல் 'ஹரிஜன்' இதழில் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் மகாத்மா காந்தி. மேலும் தம்மை 'சனாதன ஹிந்து' என்று பெருமையுடன் சொல்லிக் கொண்டார்.

சனாதனம் காக்கும் பணியில் நமது இலக்கு, மகாகவியின் வைர வரிகளை நிதர்சனமாக்குவதே. இதோ அந்த காவிய வரிகள்:



**எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்**
**எல்லாரும் இந்திய மக்கள்,**
**எல்லாரும் ஓர்நிறை எல்லோரும் ஓர்விலை**
**எல்லாரும் இந்நாட்டு மன்னர் - நாம்**
**எல்லாரும் இந்நாட்டு மன்னர் - ஆம்**
**எல்லாரும் இந்நாட்டு மன்னர் - வாழ்க!**
**பாரத சமுதாயம் வாழ்கவே! - வாழ்க வாழ்க!**
**பாரத சமுதாயம் வாழ்கவே!**

Printed by :
Madhava Mudhra, Chennai - 84. ☎ : 044 - 26420870